மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளை நான் எடுத்துச் சொல்லி விட்டேன். ஆகவே இதை மேலும் விவாதமாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம்,

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களை வழங்கக் கூடிய நுகர் பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இன்றைய தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அது பற்றி முறையாக எழுதிக் கொடுத்து விடுங்கள். (கூச்சல், குழப்பம்)

திரு. சோ. அழகர்சாமி : இன்றைக்குப் பிறகு சட்டமன்றம் ஏப்ரல் 9 ஆம் தேதி தான் கூடுகிறது. திரு. கருப்பையா அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையை எழுப்பியிருக்கிறார். ஆகவே, அதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப இயலாது. இவர் எழுப்பினாலும் அரசிடம் அதற்கு பதில் இருக்காது. முறையாக எழுதிக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கல்லூரி ஆசிரியர், ஆசிரியர் அல்லாதவர் பல்கலைக் கழகத் தேர்வுப் பணியை புறக்கணிக்க இருப்பது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், எஸ். ரெத்தினராஜ், கு. பா. பழனியப்பன், த. ஆறுமுகம், ரா. கிருஷ்ணன், டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனிவேல், ஜே. ஹேமச்சந்திரன், என். வரதராஜன், ரா. உமாநாத், மு. அப்பாதுரை, தி.கா. நல்லப்பன், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன், உ. சுப்பிரமணியன், எல். இளையபெருமாள் ஆகியோர், ''தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதார் வருகிற ஏப்ரல்—மே மாதங்களில் நடைபெற இருக்கும் பல்கலைக் கழகத் தேர்வுப் பணிகளை புறக்கணிக்க இருப்பதை யொட்டி கல்லூரி மாணவர்கள் மத்தியிலும், அவர்தம் பெற்றோர் மத்தியிலும்